சக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

ஜவுளி வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி!
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ2/50

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
[பட்டுச் சேலைகளின்
காட்சியகம்]
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில வூ சித்திரை மீ 20 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 26 (03 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-125

★ வவுனியா - மன்னார் வீதி அரசினர் பண்ணை

# இந்தியப்படை முகாம் மீது தாக்குதல்

# காவல் கைதிகள் 46 பேர் தப்பி ஓட்டம்

## திங்கள் மாலை 5.45 மணிக்கு சம்பவம்; செவ்வாய் காலை 9 மணிவரை ஊரடங்கு

— உதயன் வவுனியா மாவட்டச் செய்தியாளர் —

வவுனியா, மே, 3

வவுனியா -- மன்னார் வீதியில் அரசினர் பண்ணைப்பகுதியில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படை இராணுவ முகாம் மீது திங்கட்கிழமை மாலை தாக்குதல் நடத்தப்பட்டது!

சுமார் ஒருமணிநேரம் நடந்த தாக்குதல், பதில்தாக்குதல் சம்பவங்களைப்பயன்படுத்தி அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 46 காவல்கைதிகள் தப்பி ஓடிவிட்டனர்!

உதயனின் வவுனியா மாவட்டச் செய்தியாளர் இவ்வாறு அறிவிக்கிறார்.

இதேவேளை இந்தத்தாக்குதலைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே நடத்தினர் என்றும்—

தப்பியோடிய 46 பேரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்—

இலங்கை அரசு குறிப்பு ஒன்றில் கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இரண்டு இந்தியப் பொலீஸாரும், 4 தமிழீழ விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும் உயிரிழந்தனர் என்றும் கொழும்பில் ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

சம்பவம் குறித்து உதயனின் வவுனியா மாவட்டச் செய்தியாளர் அறிவிப்பதாவது:—

மே தினமான திங்கட்கிழமை மாலை சுமார் 5-45 மணியளவில் வவுனியா - மன்னார் வீதியில் அரசினர் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள இந்திய அமைதிப் படையின் இராணுவ முகாம் தாக்கப்பட்டு, உள்ளே இருந்த 46 கைதிகள் தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்திய பொலீஸார் ஒருவர் பலியாகியதுடன் 3 படையினர் காயம் அடைந்துள்ளார்கள் என அறிய வருகிறது.

சுமார் ஒரு மணித்தியாலம் வரையி இப்பகுதியில்துப்பாக்கிப்பிரயோகம் இடம்பெற்றுள்ளது. இந்தியப் படையினரின் மன்னார் வீதி சோதனை முகாமும் தாக்குதலுக்கு உள்ளான பதற்ற நிலை நேரத்தைப் பயன்படுத்தியே கைதிகள் தப்பியோடியுள்ளதாகச் சொல்லப்பட்டது.

இதனைத்தொடர்ந்து அமுல் செய்யப்பட்ட உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு உத்தரவையடுத்து வவுனியா நகரிலிருந்து பொதுமக்கள் எவரும் வெளியேற அனுமதிக்கப்படவில்லை. சுமார் இரவு 7-30 மணியளவில் பெண்கள் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்த ஊரடங்கு உத்தரவு நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிவரை அமுலில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

03—05—1989
சித்திரை — 20
புதன்கிழமை

சுபநேரம்:
04.26 முதல் 05.56 வரை
ராகுகாலம்:
11.56 முதல் 01.26 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## அடகு நகை மீளப்பெற மேலும் சில சலுகைகள்

மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளப் பெறுவோரிடம் இருந்து வட்டி அறவிடுவதில் மேலும் சலுகை வழங்கப்படும்.

இந்தத் தகவலை மக்கள் வங்கிகளின் பிரதேச முகாமையாளர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

அடகு நகைகளை மீளளிப்பதில் 1983 டிசம்பர் 31 ஆம் திகதி வரைக்கும் 30 சதவீத வட்டியும்—

அதற்குப் பின்னர் 1987

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக மாணவர்கள் இன்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று புதன்கிழமை ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை அனுஷ்டிக்க இருக்கின்றனர்.

உண்ணாவிரதம் பல்கலைக்கழக வளவினுள் அனுஷ்டிக்கப்படும் என்று மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, கொலை செய்யப்படுவது போன்ற செயல்களை கண்டிக்கும்வகையிலேயே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுவதாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர் சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகளாவன:

★ பல்கலைக்கழக மாணவர்கள் ஆயுதபாணிகளால் கைது செய்யப்படக் கூடாது.

★ யாழ் பல்கலைக்கழகவளவினுள் ஆயுதபாணிகள் பிரவேசிக்கக் கூடாது. (ஒ)

## அரசு - புலிகள் பேச்சுக் குறித்து சட்டசபையில் கலைஞர் கருத்து

சென்னை, மே 3

இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே தற்போது நடந்து வரும் பேச்சுக்களின் முடிவு தெரிந்த பின்னரே இலங்கைப் பிரச்சினை பற்றி மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்புகொள்ள இயலும்.

முதலமைச்சர் கருணாநிதி தமிழக சட்டசபையில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து அ. தி. மு. க. சட்டசபை உறுப்பினர் கே. கே. எஸ். ஆர். இராமச்சந்திரன் எழுப்பிய கேள்விக்கு திரு. கருணாநிதி பதிலளித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைத்து விடுதலை இயக்கங்களுடனும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்று மாநில அரசு விரும்புவதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். [ஒ-எ]

## இரு இந்தியப்படையினர் பலி திருமலை மாவட்டத்தில்!

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஓர் அதிகாரி உட்பட இந்திய அமைதிப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.

குண்டுவெடிப்பு ஒன்றைத் தொடர்ந்து ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையின் போது இருவர் உயிரிழந்தனர் என்று இந்தியத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## பல்கலைக்கழக மாணவனின் இறுதிக் கிரியைகள் இன்று

### முள்ளியவளையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 3

மரணமான யாழ் பல்கலைக்கழக மாணவன் எஸ். பிரபாகரனின் பூதவுடல் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து அவரது சொந்த ஊரான முள்ளியவளைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இறுதிக் கிரியைகள் இன்று முள்ளியவளையில் நடைபெறும்.

இறுதிக் கிரியைகளில் பங்குபற்றுவதற்காக யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் இங்கிருந்து விசேட பஸ் ஒன்றில் சென்றுள்ளனர்.

இதேவேளை யாழ் நகர அமைதிப்படை அதிகாரிகளிடம் இன்று பல்கலைக்கழக மாணவர்கள் மகஜர் ஒன்றைக் கையளிப்பர் எனவும் அறிய வருகிறது. (ஒ-9)

## பனாகொட இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை அதிரடித் தாக்கு

### எண்மர் உயிரிழப்பு

கொழும்பு, மே 3

பனாகொட இராணுவ முகாம் மீது தென்பகுதித் தீவிரவாதிகள் நேற்று அதிகாலை அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்,

அப்போது மூன்று தீவிரவாதிகளும் 5 பாதுகாப்புப் படையினரும் உயிரிழந்தனர்.

பின்னர் ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலின்போது ஜே. வி. பி. தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுவோர் 20 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

பனாகொட இராணுவ முகாம் கொழும்பில் இருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஹோமகமவுக்கு சமீபமாகவுள்ள இந்த முகாம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் மிகப்பெரிய முகாம்களில் ஒன்ருகும். (ஒ-எ)

## ஆனைக்கோட்டைப் பகுதியில் நடந்த அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், மே 3

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) இரவு ஆனைக்கோட்டைப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

ஆனைக்கோட்டையில் அரச அதிபரின் மரண வீட்டிற்கு அண்மையில் நின்றிருந்த அமைதிப் படையினரை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாம்.

இந்தச் சம்பவத்தையடுத்து அவ்வழியே வந்த சிலர் தாக்குதலுக்கு ஆளானுர்கள் எனச் சொல்லப்பட்டது.

தாக்குதலுக்கு ஆளானவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். யோசவ் சுரேஷ் [வயது 19], யோசவ் ஸ்ரீவின்ஸ்[வயது 22] ஆகியோரே அந்த இருவருமாவர்.

மேலும் ஒருவர் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவின் செய்தி ஜனாதிபதியிடம்

கொழும்பு, மே 3

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. எஸ். கே. சிங் நேற்று மாலை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்துப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட செய்தியைக் கையளித்தார்.

இதனை அடுத்து திரு. சிங் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் மிக முக்கிய பேச்சுக்களை நடத்தினுர். பேச்சுக்கள் குறித்து விவரங்கள் வெளியாகவில்லை

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னுவையும் அவர் சந்தித்துப் பேசினுர். ஒன்றரை மணித்தியாலங்கள் இச்சந்திப்பு நீடித்தது.

திரு. சிங் இன்று புதன்கிழமை புதுடில்லி திரும்புகிறுர் என்று இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

## உப தளபதி பலாலியில்

இந்திய இராணுவத்தின் உப தளபதி ஜெனரல் ரூத் நேற்று பலாலிக்கு விஜயம் செய்தார்.

பலாலி அமைதிப்படை முகாமில் அமைதிப்படையின் உயர் அதிகாரிகளை அவர் சந்தித்து பேச்சு நடத்தினுர் என்று தெரியவருகிறது.

## அரச அதிபர் பூதவுடலுக்கு நேற்றுப் பலரும் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 3

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான யாழ், அரசாங்க அதிபர் பஞ்சலிங்கத்தின் பூதவுடலுக்கு பலரும் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

அரச அதிபரின் பூதவுடல் நேற்றுக் காலை ஆனைக்கோட்டை - நவாலி வீதியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டிருந்தது.

அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியவர்களில் பெரும் பகுதியினர் யாழ். செயலகத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் ஆவர். ஏனைய அரச திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் பிரமுகர்களும் பூதவுடலுக்கு நேற்று அஞ்சலி செலுத்தியவர்களில் காணப்பட்டனர்.

செயலக ஊழியர்களில் சிலர் காலை கடமைக்குச் சென்றிருந்தனர், ஆயினும் பின்னர் அங்கிருந்து அரச அதிபரின் இல்லத்துக்குச் சென்று அவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

யாழ். அரச அதிபரின் இறுதிக்கிரியைகள் குறித்து இன்னும் தீர்க்கமாக முடிவாகவில்லை என்று தெரிகிறது. [அ]

## முல்லைத்தீவுப் பட்டினம் அல்லோல கல்லோலம்

### ரெலோ பொறுப்பாளர் மரணம்

முல்லைத்தீவு, மே 3

கடந்த திங்கட்கிழமை இரவு முல்லைத்தீவுப் பட்டினம் அல்லோல கல்லோலப்பட்டது.

இரவு சுமார் 7 மணிமுதல் 9 மணிவரை சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் இப்பகுதி மக்கள் பதற்றமும் பீதியுமுற்றனர்.

மோதல் களேபரத்தில் ரெலோ இயக்கத்தின் முல்லைத்தீவுப் பொறுப்பாளர் யேசு சுடப்பட்டு மரணமானுர் என அறியவருகிறது. [ஒ-92]

## நேற்றும் அசம்பாவிதம்

யாழ்ப்பாணம், மே 3

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமையும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் சில இளைஞர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

சம்பவம் முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள கடற்கரை வீதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம்பெற்றதாக அறிய வருகிறது.

இந்த அசம்பாவிதங்களில் பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவர் பின்னர் யாழ். வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

அந்த இருவரும் வருமாறு:-

வீரன் மீனு (10 வயது) நீக்கியாப்பிள்ளை ஞானப்பிரகாசம் (36 வயது)

இவர்கள் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் காயமடைந்தனர். (ஒ-எ)

### முச்சந்தி முரளி



என்னத்தைச்சொல்லிஎன்ன நகைகள் சனத்தின்ரை கைக்கு வருமாப்போலை காணயில்லையே......!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடை விருக்கைகள், Singer தையல் மெஷின், T.V, Fan. C~, T.V Stand, Bicycle மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை ரோட் அரசடி, நல்லூர். (10805)

### காணி விற்பனைக்கு

நாவற்குழி புகையிரத நிலையத்திலிருந்து கால் மைல் தூரத்தில் கேரதீவு வீதியில் 9½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: N. Thillainadarajan 55, Rail Road. Kachcheri East, Jaffna. (10787)

### அச்சகம் விற்பனைக்கு

மிகவும்சிறந்த நிலையிலுள்ள ஓட்லி சிலிண்டர் அச்சியந்திரம் புதிய எழுத்துக்கள், கேஸ்கள் மற்றும் அச்சக சாதனங்கள்உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். முந்துபவர்களுக்கே முதலிடம். முகாமையாளர் 'மலரகம்' ஏழாலை வடக்கு, ஏழாலை. அல்லது தனலட்சுமி புத்தகசாலை, சுன்னாகம். (330)

### வலம்புரிச்சங்கு

இல்லங்களில் லட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூசை ஆராதனைகளுக்கும் வியாபார நிலையங்களில் வளங்கொழிப்பதற்கும் உகந்த வலம்புரிச்சங்கு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்க. தாஸ்.188புதுச்செட்டித்தெருகொழும்பு—13. (331)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

[Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு 8ஆம் 3ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 100 குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 4/- முன்கூட்டியேபதிவு செய்க.இல.9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (10776)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேடடுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு வரிச் சேவல் குஞ்சுகள் (Cobb) புறொயிலர்க் குஞ்சுகள் [9- 5- 89] செவ்வாய்க்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியேபதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10775]

### கோழிக்குஞ்சு விநியோகம்

புறொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) கறுப்பு சேவற்குஞ்சுகள் பிறவுண் சேவற்குஞ்சுகள். 4/5/89 வியாழக்கிழமை. விநியோகிக்சப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (351)

பிறவுண் சேவற்குஞ்சுகள். 100க்கு மேல் விலை 3/50 250க்கு மேல் விலை 3/00, முழுப்பணமும் முன் கூட்டியே செலுத்தி பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படிலேன் கொக்குவில். (350)

## பிள்ளையார் ஆலய உற்சவம்

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் மே 11 ஆம் திகதி ஆரம்பமாகிறது. சப்பறத் திருவிழா 18 ஆம் திகதியும் இரதோற்சவம் 19 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 20 ஆம் திகதியும் நடை நடைபெறும். (க)

### பேக்கரி வேலை ஆட்கள் தேவை

பேக்கரி வேலைக்கு நல்ல அனுபவம் [உள்ள ஆட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். சி. சிவலிங்கம், தினேஷ் பேக்கரி மாக்கட், மானிப்பாய். (10789)

### தேவை

மெழுகுதிரி, கற்பூரம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். V. அரியரெட்ணம், 151 [345], கோவில்வீதி நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் கோவில் பின்பக்கம்) (334)

### பிரயோக கணிதம்

நிலையியல் பகுதி 1 பயிற்சி நூல் வெளிவந்து விட்டது. 1990 இற்கும் அதற்குப் பிற்பட்ட பரீட்சைகளுக்குமான புதிய பாடத்திட்டத்திற்கமைந்தது. யாழ் முன்னணிக் கல்லூரி ஆசிரியர்களால் சிபார்சு செய்யப்பட்ட நூல் ஆசிரியர்: சி, துரையப்பா St. John's College, யாழ்ப்பாணம். (311)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline புறொயிலர் ஒருநாள் பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு சிவப்பு வெள்ளை 07-05-1989, 09-05-1989 விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. Lucky Farm House, Mathavady Lane, Thirunelvely [10779]

### செங்கை ஆழியான் நாவல் இலவசம்

மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம் நாவல்களில் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை கொடுத்து 'மண்ணின் தாகம்' நாவலை இலவசமாக பெறுங்கள். ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். கவிதா ஸ்டோர்ஸ், வவுனியா. (298)

### New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ player, phillips கெசற் ரெக்கோடர், phillips Gas Cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருட்களையும் பெற்றுக்கொள்ள New City Traders, 135. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/2291)

### கிறிஸ்தவ சைவசமய திருமண சேவை

எம்மிடம் இரு மதத்தையும் சேர்ந்த ஆண்களும், பெண்களும் உண்டு. தங்கள் அன்புப் பிள்ளைகளின் வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் அவர்களின் எதிர்காலத்தை சீரும் சிறப்புடனும் அமைக்க எம்மை நாடுங்கள். அமைப்பாளர்: திரு. வின்ரோ மகேந்திரா, தொடர்பு: No. 6, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம், (மக்கள் வங்கிக்கருகாமை)No. 17,கோவில் வீதி, யாழ்ப்பாணம். (352)

### மணமகன் தேவை

பட்டதாரி வயது 44 யாழ்ப்பாணத்தில் அரசாங்க சேவை எழுது வினைஞரான இந்து வேளாள குல மணமகளுக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க. 506, C/o Uthayan, Jaffna. [349]

Jaffna Hindu College
**TACEP CENTRE**
ACHIEVEMENT TEST
te and Time Satu day 06. 05. 89 — 9.00 a.m.
Cand dates Please be Present at 8. 45 a.m.
(C-2423. - **Centre Co-ordinator.**

### பிள்ளையார் கோயில் நிர்வாகிகள்

சாவகச்சேரி மே 3

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடிப்பிள்ளையார் தேவஸ்தான பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. க. தம்பிராசா தலைமையில் நடைபெற்றபோது புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. தம்பிராசா, உபதலைவர்கள்: திரு. சி. சுந்தசாமி, திரு. ம. குழந்தைவேலு, செயலாளர்: திரு. ச. ம. அருளம்பலம், உப செயலாளர்: திரு. மா. சின்னத்துரை பொருளாளர்: திரு. இ. இராசநாயகம். (க-31)

# அமைதி காக்கப்படவில்லை அமைதி குலைக்கப்படுகிறது
## இடது க. கட்சி மேதின விழாவில் உரை

குருநகர், மே 3

''இந்த நாட்டில் அமைதி காக்கப்படவில்லை, அமைதி குலைக்கப்படுகிறது. அதனால் தான் இந்தியப் படைகள் வெளியேற்றப்பட வேண்டும் என்று சொல்கிறோம். ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேச்சு வார்த்தை பத்து ஆண்டுகளுக்கு முன்னதாக நடைபெற்றிருக்க வேண்டிய ஒன்று.''

மே முதலாம் திகதி யாழ் பட்டப் படிப்புகள் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) யின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. சி. கா. செந்திவேல் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தமது உரையில், ''நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சு வார்த்தையை நாம் முழு மனதோடு வரவேற்கிறோம்.

இந்தப் பேச்சுவார்த்தை நிறைவேறாத பூச்சாண்டியாகக் கூட அமைந்துவிடலாம்'' என்று கூறினார்.

திருவாளர்கள் சோ. தேவராஜா, க. தணிகாசலம், கா. பஞ்சலிங்கம் கா. கதிர்காமநாதன் ஆகியோரும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

கூட்டத்தில் மேதின அறைகூவலாகப் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. [ச - 51]

## அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப்படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
**அறிவொளி**
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

**'அறிவொளி'**
**கல்வி வெளியீடு**

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப்படுகின்றது கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

**அறிவொளி**
**பிறைட் பயிற்சி நிறுவனம்,**
**த பெ. இல. 162.**
**கொழும்பு.**

(308)

## Uduvil Girl's College

## Further Education Programme

✶ Programming in Basic Language
Data processing and training on Archimedes B.B.C Master Compact Radio Shack and Acorn Computers
**3 Month Course ✶ Practicals 40 hrs.**
**Fees Rs. 1500/-**

✶ Diploma in Structured Cobol
Latest structured programming Techniques & Training on B. B. C. Master Compatibles.
**Practicals 40 hours**
**Fees Rs. 1500/-**

✶ Dipl ma in D Base III +
Using Modular Programming Techniques on line Data Base Updations. Multiple Data Base handling
**Indexing Practicals 50 hours.**
3 month Course **Fees Rs. 1750/-**

**Commencing on 05-05-1989**
**(Week Days)**

[C/2416] **DIRECTRESS.**

## சாரணத் தலைவர் அறிமுகப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 3

யாழ். மாவட்ட சாரணர் குருளைச் சாரணத் தலைவர் அறிமுகப்பயிற்சி(அவத்தை I) யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 6 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்.

பயிற்சி காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம் பெறும். (ச)

## முஸ்லிம் நலன் பாதுகாப்பு சபை அங்குரார்ப்பணம்

அம்பாறை மே 3

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு உட்பட ஏனைய பிரச்சினைகளைக் கண்காணிக்கவும், உடனுக்குடன் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் நலன் காப்புசபை என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள இந்த அமைப்பில் மாவட்டத்திலுள்ள சகல முஸ்லிம் கிராமங்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், திகாமடுள்ள மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஐனுப் எம் எச். எம். அஷ்ரப்பின் தலைமையில், இந்த அமைப்பின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. [ச - 14]

## வல்லிபுரக் கோவில் தண்ணீர் தாங்கி

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில்கற்கோவளத்தைச்சேர்ந்த அமரர் வைத்திய கலாநிதி அருளானந்தம்(ஆனந்த வாத்தியார்) ஞாபகார்த்தமாக சுமார் எழுபத்தையாயிரம் (75, 000) ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கியின் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் இத்தண்ணீர்த் தாங்கியைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைப்பார் [க-118]

## HONDA AUTHORIZED AGENT, GEETHA MOTORS, TELLIPPALAI

| | | |
|---|---|---|
| New | C50 Square Light Custom (L ncer) (சிவப்பு கையிருப்பில் உண்டு.) | 28,000/- |
| New | CG125 Old model Round meter (10 - 05 - 89) | 46,000/- |
| New | C90 Econo Power (25 - 05 - 89) | 34,000/- |

● முற்பணத்துடன் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும். மோட்டார் சைக்கிள் இறக்குமதி திகதி 10 - 05 - 89
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**GEETHA MOTORS**
Main Road, (Near A. G. A.'s Office) TELLIPPALAI.
[10809]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெஞ்சு மொழி வகுப்புகள்
## LEARNING FRENCH

**Join the Alliance Francaise de Jaffna**

for Beginners and Others
New Term Commences on 05-05-89

**Information and Registration:**

**யாழ் பிரெஞ்சு நட்புறவுச் சங்கம்**
Alliance Francaise De Jaffna
130, 1st. Cross Street,
JAFFNA.

[C/2348]

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

### தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா
(சிறைவாசன்)

தோற்றம்: 24- 11- 1967 மறைவு: 21- 03- 1989

அகாலமரணமடைந்த செல்வன் த. முரளிகிருஷ்ணாவினுடைய மரணச்சடங்கில் நேரடியாக சமூகம் அளித்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், எமது துக்கத்தில்பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு உதவி புரிந்த உறவினர்கள், நண்பர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எதிர்வரும் 05- 05- 89 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாசமுள்ள
அப்பா, அம்மா, அண்ணா, தங்கை
உற்றார், உறவினர்.

''உதயதாரகை''
மல்லாகம். (405)

## 4ஆம் வருட நினைவஞ்சலி



### திரு.கே.எஸ். சுப்பிரமணியம்(K.S.S)
(யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் ஆசிரியரும் விடுதி அதிபரும்)

மலர்வு: 21-03-1903 உதிர்வு: 18-04-1985

திதி: சித்திரை மாத துவாதசி (03-05-1989)

அன்பும் அறனும் அருள் சேர்ந்த ஆதரவும்
பண்பும் பரிவுமுளப் பான்மையுமே
—பொன்மனத்தோன்
கேண்மை மிகு கே. எஸ். எஸ். கீர்த்தி
நிறைவிக்கும் மாண்பின் குணச்சீர்வளம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(சி/2424)

# மண்டைதீவு-யாழ் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்க கோரிக்கை

மண்டைதீவு, மே 03

தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள யாழ் - மண்டைதீவு பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி பிரயாணிகள் யாழ் இ.போ.ச கோண்டாவில் சாலை அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இது தொடர்பான மகஜர் ஒன்றை பிரயாணிகள் சார்பில் திரு. பிரான்சீஸ் பவுலப்பு சாலை அதிகாரியிடம் அண்மையில் கையளித்தார்.

இப் பகுதி பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், நலன் கருதி தினசரி மட்டுப்படுத்தப்பட்ட சேவையையாவது முதலில் ஆரம்பித்து உதவுமாறு அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டது. (க-88)

# தொழிலாளி வர்க்க அரசை நிறுவ தொழிலாளர் திரண்டு போராட வேண்டும்

## நாவாந்துறை மேதின விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே, 03

''தொழிலாளி வர்க்கம் தன் பலத்தை உணர்ந்து எழுச்சி கொண்ட தினம் மேதினம். அது உலகத் தொழிலாளர்களின் வெற்றித்தினம். தொழிலாளர்களின் கடந்த காலப் போராட்டத்தை மீளாய்வு செய்து நிகழ்கால நிலைமையைப் பரிசீலித்து எதிர்காலப் போராட்டப் பாதையை நிர்ணயிக்கும் தினம் மேதினம். தொழிலாளர்கள் சம்பள உயர்வு, வேலைவசதிகள் ஆகியவற்றுக்காக மட்டுமல்ல, தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தி தொழிலாளி வர்க்க அரசு ஒன்றை நிறுவவும் ஸ்தாபன ரீதியாகத் திரண்டு போராட வேண்டும்.

நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் இலங்கைத் தொழிற் ங்க சம்மேசனத்தின் வடபிரதேசக் கமிட்டி நடத்திய மேதினக் கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய போது திரு. டானியல் அன்ரனி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கைத்தொழிற் சங்கசம்மேளனத்தின் வட பிரதேசக் கமிட்டியின் பொதுச்செயலாளர் திரு. எம். ஏ. சி. இக்பால், பேசுகையில் ''இந்திய இராணுவம் இங்கே வந்ததால் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடவில்லை, இன்னும் மோசமாகியுள்ளன. ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் ஆகியன முடிந்து புதிய ஜனாதிபதி, புதிய நாடாளுமன்றம் ஆகியன வந்தும் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.

தமிழ்ப் பிரச்சினையைத் தமிழர்கள் மட்டும் தனித்து நின்று தீர்க்க முடியாது.''

''சிங்கள முதலாளித்துவ அரசு அனுப்பிய ராணுவச் சக்திகள் வகுப்புவாத ரீதியில் செயற்பட்டு தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கின.

இன்று விஜேவீராவின் ஜே.வி பி யும் வகுப்புவாதம் பேசி தமிழ் மக்களை எதிர்க்கிறது. இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு வழங்கிய சலுகைகளைக் கூட ஜே, வி. பி. இயக்கம் எதிர்க்கிறது.'' இப்படி அவர் கூறினார்.

திரு வி. ரி. இளங்கோவன் இக் கூட்டத்தில் பேசும் போது பல போராட்டக் கவிதைகளை மேற்கோள் காட்டிப் பேசினர். திருவாளர்கள் சூ.மார்க், ஐ.நல்லையா, கே.செல்லத்துரை, ப.பிரான்சிஸ் ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

''நாட்டுக்கு விடுதலை வேண்டும், மக்களுக்கு சுதந்திரம் வேண்டும்'' என்ற கோஷத்தின் கீழ் இந்த மே தினக் கூட்டம் நடைபெற்றது. [ச-க]

# பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி

கரவெட்டி, மே 3

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நாற்பது பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு போருட் நிறுவனமும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து பயிற்சி வழங்க இருக்கின்றன.

மூன்றுமாத காலம் நடத்தப்படும் இப்பயிற்சி நெறிக்கு 6-ஆம் மாத முற்பகுதியில் தேர்வுகள் நடத்தப்படும் எனவும் அறியவருகின்றது. உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் சமர்ப்பிக்க வேண்டும் என மேற்படி நிறுவனங்கள் கோரியுள்ளன.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை சனசமூக நிலையங்களின் சமாச செயலாளர் திரு. ரீ. வரதராஜன் மேற்கொண்டிருக்கிறார். க-70]

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுலாகவேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சி மேதின விழாவில் உரை

திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஆனால் குடியேற்றங்களை நாம் எதிர்க்கவில்லை.

இலங்கை- இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுல் செய்யப்பட வேண்டும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். அமைப்பாளர் திரு. து. குகதாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்திற்கு முன்னாள் வல்வெட்டித்துறை பட்டின சபைத் தலைவர் திரு. நவரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. குகதாஸ் தமது உரையில் மேலும் கூறியதாவது:

'மாகாணசபைகளுக்குஉடனடியாக வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் கம்யூனிஸ்ட் கட்சி போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும்''

இப்படி அவர் கூறினர்.

திரு. நவரத்தினம் தமது உரையில் இதுவரைகாலமும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுடன் நடந்த மேதினம் இன்று ஊர்வலங்கள் இன்றி நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே எனக் கவலை தெரிவித்தார்.

சீமேந்துக் கூட்டுத் தாபன தொழிலாளர் தலைவர் ஜோதிபால, திரு. ஆர். கே. சிவஞானம், ஆசிரியர் அன்ரனி ஆகியோரும் உரையாற்றினர்

# கிராம சேவகர் இல்லை

யாழ்ப்பாணம், மே 3

வட்டுக்கோட்டை சங்கரத்தையில் கடந்த ஆறு மாத காலமாக நிரந்தரமான கிராமசேவகர் இல்லாதிருக்கின்றது. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகின்றனர்.

# வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்.

# கேள்வி அறிவித்தல் - 1989

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றிற்கு 31 - 12 - 1989ஆம் திகதி வரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரை இடப்பட்ட தனித்தனிக் கேள்விகள் (வியாழக்கிழமை) 11 - 5 - 89 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணி வரை வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் அவ்வவ் உப அலுவலகங்களில் (புதன்கிழமை) 10 - 5 - 89 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும். மேலதிக விபரங்களை பிரதேசசபை உப அலுவலகத்திலும், தலைமை அலுவலகத்திலும் காரியாலய நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**க. சபாபதிப்பிள்ளை,**
விஷேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நகரமண்டபம்,
மானிப்பாய்.
27. 4. 1989

## வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் பட்டினப் பிரதேசம்.

| குத்தகையின் தன்மை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்வித் தொகையுடன் மேலதிகமாக செலுத்த வேண்டிய மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட தொகை |
|---|---|---|---|---|
| **மானிப்பாய் பட்டினம்** | | | | |
| 1. ஆட்டிறைச்சிக்கடை [சந்தை] | 50/- | 190/- | 300/- | 20, 000/- |
| 2. பலசரக்குக்கடை (புளியடி சந்தை) | 50/- | 190/- | 300/- | 20, 000/- |
| **மானிப்பாய் கிராம பிரதேசம்** | | | | |
| 1. காக்கைதீவு சந்தை ஆனைக்கோட்டை | 50/- | — | 300)- | 2, 500/- |
| 2. சாவக்காட்டுச் சந்தை கருவாட்டுக்கடை | 50/- | (ஆண்டுக் குத்தகை) | 200/- | 1, 000/- |
| **பண்டத்தரிப்பு கிராம பிரதேசம்** | | | | |
| 1. கற்குளாவை வளவுக் குத்தகை | 50/- | — | 25/- | 200/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை (இளவாலை) | 50/- | — | 300/- | 4, 875/- |

கேள்விக்காரரே இளவாலை இறைச்சிக்கடையை ஏற்ற இடத்தில் தங்கள் செலவில் அமைத்தல் வேண்டும்.

(C/2401)


# சிக்மா பம்ப்ஸ்



# CEYGMA PUMPS



உங்கள் தேவைகளுக்கேற்ற

மின் மோட்டர்கள்
**ELECTRIC MOTOR PUMPS**

½ HP — 1" × 1" — 3400. 00
½ HP — 1½" × 1¼" — 3800 00
¾ HP — 1½" × 1½" — 4450. 00
1 HP — 1½" × 1¼" — 4750. 00
1½ HP — 2" × 2" — 5950. 00

- நீர் இறைக்கும் இயந்திரங்கள் **Engine Driven Pumps**
- இந்தியன் விலியர்ஸ் பொருத்தப்பட்டது **Indian Villiers MK 12** - 7950. 00
- குபோடா என்ஜின் பொருத்தப்பட்டது **Kubota KS 160** - 9300. 00

இப்பொழுது கையிருப்பில் உண்டு. எமது பம்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம் (Guarantee) உண்டு. பழுதடைந்த பம்புகள் அதிவிரைவில் திருத்தி (Repairs) புனரமைத்துக் கொடுக்கப்படும்.

இவை தவிர உங்கள் தேவைக்கேற்ப விஷேச பம்புகள் மோட்டருடன் இணைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:

# UNITED AGRO ENGINEERING

274/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி.

[சி/2398]



# ★ நற்செய்தி ★

JVC **JEYA AND BROTHERS** JAB

ஜெயா வீடியோ சென்ரர் ஸ்தாபனத்தாரால் கனடா (ரொரன்ரோ) மாநகரில் புதிதாக
ஜெயா அன் பிரதர்ஸ்
எனும் ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளதை அறியத்தருகிறோம்.

கிளைகள்:
குணம் வீடியோ சென்ரர், 47, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T. P. 23665.

இலங்கை, இந்தியா, கனடிய உணவுப் பொருட்களும்
இலங்கை இந்தியாவிலிருந்து வெளி வரும் தினசரி பத்திரிகைகளும், வார இதழ்களும் மாத நாவல்களும், சினிமா சஞ்சிகைகளும் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும்

கமலா ஸ்ரோர்ஸ், ஜெயா வீடியோ சென்ரர் 10, நியூ மாக்கட், வவுனியா. T. P. 2368.

பழைய புதிய தமிழ், ஹிந்தி, ஆங்கிலப் படங்களை வாடகைக்கும், விலைக்கும் பெற்றுக் கொள்ளவும்.
பழைய, புதிய தமிழ் நாடாக்கள், இசைதட்டுகள் U. S. A., Canada ஏக விற்பனைக்கும் -
உங்கள் வாழ்க்கையில் நடைபெறும் மங்களகரமான வைபவங்களை
சிறந்த தொழில் நுட்ப கருவிகள் மூலம் தரமான
கனடாவிலும் இலங்கையிலும் பாவிக்கக் கூடிய முறையில்
வீடியோ படம் பிடித்து தரப்படும். (Pal, Secam, Ntsc)
மேலும் ரொரன்ரோ மாநகரில் புதிதாக திறக்கப்பட்ட ராஜா திரை அரங்கில் ஒவ்வொரு வாரமும் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படும்.

இம் மாத வெளியீடுகள்:
- பிள்ளைக்காக
- அபூர்வ சகோதரர்கள்
- என் ரத்தத்தின் ரத்தமே
- சிவா

# JEYA AND BROTHERS

மகேஸ் வீடியோ சென்ரர் பாரீஸ், பிரான்ஸ்.

**588, Parliament St, Toronto. ONT. M4X IP8, CANADA.**
Tel. (41 ) 9609632 or 9209226, 9200998, 3248831, Fax [416] 9241640
PAGER - 3761294.

ராகுலன் வீடியோ சென்ரர் டென்ஹாக், நெதர்லாந்து. T. P. 808388.

[10804]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திகை வைத்தியசாலையில்

# தடுப்பூசி மருந்துக்குத் தட்டுப்பாடு

வடமராட்சி, மே 3

மந்திகை வைத்தியசாலையில் தடுப்பு ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

வாதநோய்களுக்கு போடும் தடுப்பு ஊசி மருந்துகளுக்கே தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் நோயாளிகள் கஷ்டமடைவதோடு வெளியில் வாங்க முடியாத நிலையில் உள்ளனர்.

குறிப்பிட்ட ஒரு சில மாதங்களுக்கு ஒருமுறை சுகாதார வைத்தியப் பகுதியில் இருந்து அனுப்பி வைக்கப்படும்மருந்து வகை இதுவரை அனுப்பி வைக்கப்படாததே தட்டுப்பாட்டுக்குக் காரணம் என மந்திகை வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-160)

## காந்தி ச ச. நிலையம் நடத்திய பேச்சு போட்டிகளில் பரிசுபெற்றோர்

அரியாலை மேற்கு மே 3

அரியாலை மேற்கு காந்தி சனசமூகநிலையத்தின் 39ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டுப் போட்டியும் ஏப்ரல் மாதம் 14ஆம், 15ஆம் 16ஆம், 17ஆம் திகதிகளில் நடைபெற்றன.

வைபவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டிகளில் கீழ்ப்பிரிவில் செல்வி எஸ். சுமத்திரா முதலாவது இடத்தையும், செல்வி கா.சத்தியரஞ்சனி இரண்டாவது இடத்தையும், செல்வி கா.தமயந்தி மூன்றாவதுஇடத்தையும் பெற்றனர்.

மத்திய பிரிவில் செல்விகள் பி. மைதிலி முதலாம் இடத்தையும், ந. சுபாஜினி இரண்டாம் இடத்தையும், யே.கசில்டா, பி. மைதிலி ஆகிய இருவரும் மூன்றும் இடத்தையும் பெற்றனர்.

மேற்பிரிவில் திரு. வே. சிவகுமாரன் முதலாம் இடத்தையும், திரு. கா. பஞ்சலிங்கம் இரண்டாம் இடத்தையும், செல்வி ஐ. பிரேமராஜி மூன்றும் இடத்தையும் பெற்றனர்.

இவர்களுக்கான பரிசில்கள் இறுதிநாள் நிகழ்ச்சிகளின் போது வழங்கப்பட்டன. (க-13)

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் மே 3

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விளையாட்டுக் கழகங்களின் அபிவிருத்திச் சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகப் போஷகர் திரு. அ. குலரத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ச)

## முஸ்லிம் சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு, மே 3

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிய சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைக்கும் அறிவிப்பை உடனே வெளியிடும்படி பாமிஸ் முஸ்லிம் இளைஞர் சம்மேளனம் அரசாங்கத்தைக் கோரியிருக்கிறது.

கிழக்கில் கன்டன் அமைப்பை அறிமுகப்படுத்தும்படியும் பாமிஸ் அரசாங்கத்தைக் கோரியிருப்பதாக அதன் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-எ)

## அன்பளிப்பு

மட்டக்களப்பு மே 3

மட்டக்களப்பு பொது வைத்தியசாலையை புனரமைப்பு செய்வதற்காக நோராட் நிறுவனம் புனர்வாழ்வு புனரமைப்பு திட்டத்தின் கீழ் 47 லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

முதற் கட்டமாக கிடைத்த 30லட்சம் ரூபா நிதியில் பல்வேறு புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகி உள்ளன. (ச-21)

# சிங்களச் சட்டத்தால் பாதிப்புற்ற அரசாங்க ஊழியருக்கு நஷ்டஈடு

## அஞ்சல் சேவையாளர் சங்க கோரிக்கை

அம்பாறை, மே 3

'சிங்களமொழிச் சட்டம் அமுலாக்கப்பட்டதால்பாதிப்புற்ற சகல ஊழியர்களுக்கும் நஷ்டஈடுவழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்கண்டவாறு அரசாங்கத்தைக்கோரும் தீர்மானம் ஒன்றை இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்புச் சேவையாளர் சங்க கல்முனைக் கிளை நிறைவேற்றியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இக்கிளையின் பதினேராவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டத்தில் மேலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ அந்தந்தமாதத்திற்கான உண்மையான புள்ளி விபரங்களின்படி வாழ்க்கைச் செலவு சொடுப்பனவு செய்யப்படவேண்டும்.

★ பொறுப்பு அஞ்சல் அதிபர்களுக்கு ரூபா 300 பொறுப்புக்கடமை கொடுப்பனவாக மாதாமாதம் வழங்கப்படவேண்டும்.

★ ஆறு நாட்கள் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் தபாலதிபர்கள், தொலைபேசி இயக்குநர்கள் ஆகியோரின் சம்பளத்தோடு மூன்று சம்பள உயர்வுத் தொகையைக் கூட்டி வழங்க வேண்டும் அல்லது மேலதிக வேலைசெய்யும் நாட்களுக்கு நாட்சம்பளம்வழங்கவேண்டும்

★ விடுமுறை பிரயாண ஆணைப்பத்திரம் ரயிலில் மட்டுமல்லாது இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்களிலும் பிரயாணம் செய்யக்கூடியதாக வழங்கவேண்டும்.

தற்பொழுது மூன்றும் வகுப்பு விடுமுறைப் பிரயாண ஆணைப்பத்திரம் வழங்கப்படும் சகல உத்தியோகத்தர்தர ஊழியர்களுக்கும் இரண்டாவது வகுப்பு ஆணைப்பத்திரம் வழங்கவேண்டும். [ச-14]

## கடனை எதிர்பார்த்து நிற்கும் அரச ஊழியரின் அவலநிலை

### ஆண்டறிக்கையில் பிரஸ்தாபம்

அம்பாறை, மே 3

'அரசாங்க ஊழியன் இப்போதும் 'கியூ'வில்தான் நிற்கின்றான். அதாவது அடுத்து வழங்கப்படும் கடனை எதிர்பார்த்தே அவன் 'கியூ'வில் நிற்கின்றான்.

அஞ்சல் தொலைத்தொடர்புச் சேவையாளர் சங்க கல்முனைக்கிளையின் பதினேராவது ஆண்டறிக்கையில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி கிளையின் பதினேராவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கிளைத்தலைவர் திரு. பீ. எஸ். அல்பிரட் தலைமையில், அம்பாறை தபாலகமண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1977ஆம் ஆண்டுக்குமுன் அரசாங்க ஊழியனால் ஓரளவாவது சேமிக்க முடிந்தது.

ஆனால் இப்பொழுது அப்படிச் சேமிக்க முடிவதில்லை கடன்பழக்கங்கள்தான் அவன் கண்டமிச்சமாகும்.

தமிழ்மொழி அரசகரும மொழி ஆக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துதல் ஆமைவேகத்திலேயே நடைபெறுகின்றது.

தமிழ் அரச ஊழியர்கள் இன்னும் சிங்கள மொழித் தேர்ச்சியின்மைக்காகத் தண்டனைக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

தமிழ்மொழி அரசகரும மொழியாக நடைமுறைப்படுத்துதல் துரிதப்படுத்தப்படல்வேண்டும்'.

—இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ச-14]

## வீணாக்கப்படுவதைத் தவிர்க்க தந்திப் படிவத்துக்கு 25சத முத்திரை

கொழும்பு, மே 3

25சத முத்திரையைக் கொடுத்தே தந்திப் படிவத்தை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் திட்டம் ஒன்றை அமுல் நடத்த இருப்பதாக தபால், தந்தித் தொடர்பு அமைச்சர் அலிக் அலுவிஹார அறிவித்திருக்கிறார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தந்திப் படிவங்கள் வீணாக்கப் படுகின்றன. அதனால் தட்டுப்பாடு நிலவுகிறது.

இதைத் தடுப்பதற்காகவே 25 சத முத்திரையை ஒட்டும் முயற்சி ஆகும்.

இது தந்திப் படிவத்துக்கான கட்டணம் அல்ல, தந்திப் படிவம் நிரப்பிக் கொடுக்கப்பட்டதும் தந்திக்கட்டணத்தில் இருந்து 25 சதம் படிவத்துக்காகக் கழிக்கப்படும்.

இப்படி அமைச்சர் மாத்தளையில் நடந்த கலந்துரையாடலில் தெரிவித்தார்.

மே 28 முதல் ஜூன் 3ஆம் திகதி வரை அகில இலங்கைத் தபால் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது (இ - எ)

# எதிர்கால வாழ்வு வளம்பெறுவதற்கு சேமிப்பு அவசியம்

## சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் உரை

மானிப்பாய், மே 3

மக்களின் எதிர்கால வாழ்வு வளம்பெற சேமித்தல் அவசியம் ஆகும்.

இலங்கைவங்கியின் தொடர்ச்சியான ஐம்பது ஆண்டு கால சேவை பூர்த்தியை முன்னிட்டு மானிப்பாய் இலங்கை வங்கியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சேமிப்புத் திட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்ட திரு. எஸ். சிவகுருநாதன் மேற்கண்டவாறு கூறினர்.

சேமிப்பு சான்றிதழ் வழங்கும் வைபவத்துக்கு மானிப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. கே. உமாபதி தலைமை வகித்தார்.

திரு. சிவகுருநாதன் தமது உரையில் மேலும் கூறியதாவது;

சேமிக்கும் பழக்கம் இன்று மக்களிடையே குறைந்து விட்டது. எதிர்கால வாழ்வை வளம் பெறவைக்கவும் அதே சமயம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சுபீட்சத்துக்கும் சேமிப்புத்திட்டத்தில் சேர்ந்து கொள்வது அவசியமாகின்றது.

சேமிப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மக்கள் தாமும் பங்களிப்பு செய்த பெருமையும் அடையமுடியும்.

இப்படி அவர் கூறினர்,

இலங்கைவங்கியின் யாழ்ப்பாண மாவட்ட கடன் வழங்கும் அதிகாரி திரு. எஸ். பாலசுப்பிரமணியம் சேமிப்புத் திட்டத்தில் பணத்தை முதலீடு செய்யும் முறைகளைப் பற்றி விளக்கிக்கூறினர்.

இலங்கை வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் திரு. கே. உமாபதி தமது தலைமையுரையில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதிபல்வேறுவளமானபுதுப்புதுத்திட்டங்களை இலங்கைவங்கி அறிமுகப்படுத்தி வருகிறது. அத்திட்டங்களை வாடிக்கையாளர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

இலங்கைவங்கியின் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் திரு. கே. கணேசமூர்த்தியும் விழாவில் கலந்து கொண்டார்.

பிரதமவிருந்தினர் திரு. சிவகுருநாதன் வாடிக்கையாளர்களுக்குச் சேமிப்புச் சான்றிதழ்களை வழங்கினர். (இ-90)

## பரீட்சை

ஆசிரியர், எழுதுவினைநர் ஆகியோருக்கான ஆங்கில சான்றிதழ் (TCEP)இறுதிப் பரீட்சை6 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.(க-118)

## சாரணர்கள் சமூகப்பற்றுடன் சிரமதானப் பணி செய்யவேண்டும்

### கொத்தியாலடி மயான சிரமதானத்தில் உரை

மானிப்பாய், மே 3

இன்றைய சூழ்நிலையில் இளம் சாரணர்கள் துணிச்சலுடனும் சமூகப்பற்றுடனும் சிரமதானப் பணிகளில் ஈடுபடுவது வரவேற்கக்கூடியவிடயமாகும்.

சுன்னுகம் கொத்தியாலடி இந்து மயான சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. இராசையா மேற்கண்டவாறு கூறினர்.

காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் பத்தாவது ஆண்டு அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மானிப்பாய் சாரணர் பிரிவினர் பல சிரமதானப்பணிகளைமேற்கொண்டு வருகின்றனர்.

வலி - வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. இராசையாவை தலைவராக கொண்ட கொத்தியாலடி இந்துமயான அபிவிருத்தி சங்கத்தின் ஒத்துழைப்புடன் மேற்படி மயான சுத்திகரிப்பு சிரமதானப் பணிகள் நடைபெற்றன.

மானிப்பாய் சாரணர் தொகுதியின் மல்லாகம் பிரிவைச் சேர்ந்த மயிலணி சைவ மகாவித்தியாலயம், ஏழாலை சைவ மகாவித்தியாலயம் ஆகியவற்றின் சாரணர் குழுக்கள் சிரமதானம் மூலம் மயானத்தை துப்புரவு செய்தனர்.

மல்லாகம் பிரிவு சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. திருச்சி நவரத்தினம், மானிப்பாய் சாரணர் உதவி மாவட்ட ஆணையாளர் திரு. இ. இராஜகுமார், வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் உட்பட பலர் இச்சிரமதானப் பணிகளில் கலந்து கொண்டனர். (ச-90)

## நூல்நிலையம் இயங்குவதனல் மக்களுக்குச் சிறந்த சேவை

சுன்னுகம், மே 3

'நூல்நிலையத்தைச் சிறப்பாக இயக்குவதன் மூலம் இப் பகுதி மக்களுக்கு உயர்ந்த சேவையைச் செய்யும் வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கிறது. ஒவ்வொருவரினதும் வீடுகளில் எடுப்பார் இல்லாமல் கிடக்கும் நூல்களை சேகரித்து நூல் நிலையத்தில் வைப்பதன்மூலம் பலருக்கும் அந்நூல் பயன்படுவதோடல்லாமல் அரிய பல கலைப் பொக்கிஷங்களை பாதுகாத்த பெருமையும் உங்களை வந்து சேரும். இந்த விடயத்தில் அம்பேத்கார் சனசமூக நிலையம் குறிப்பிடத்தக்க சேவையை செய்துள்ளது குறித்து நான் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவிக்கிறேன்''

சுன்னுகப் பிரதேச சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வி.கந்தசாமி மேற்கண்டவாறு கூறினர்.

சுன்னுகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் திரு. சபா புஸ்பநாதன் தலைமையில் நடைபெற்ற போது திரு. வி. கந்தசாமி மேற்கண்டவாறு தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

கந்தரோடை துர்க்கா மெடிக்கல் கிளினிக் டாக்டர் திருமதி ரேணுகா முத்துராசா அன்பளிப்புச் செய்த டாக்டர் அம்பேத்கார் அவர்களின் உருவப்படத்தை திரு. வி. கந்தசாமி திரைநீக்கம் செய்து வைத்தார்.

சிறந்த சிரமதான சேவையாளராக தெரிவான திரு. வேலாயுதம் செல்வத்திரவியம் அவர்களுக்குரிய பரிசில்களை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.வி.கந்தசாமி வழங்கி கௌரவித்தார். [illegible] துவருட உத்தியோகத்தர் தெரிவும் இடம்பெற்றது. (இ-27)

## உயர்மட்ட விசாரணை

கொழும்பு, மே 3

கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவருக்கு முன்னணி வங்கி ஒன்று பெரிய கடன் ஒன்றைக் கொடுத்தது தொடர்பாக உயர்மட்ட விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தக் கடனை வழங்கிய தாகக் கூறப்படும் வங்கி உயர் அதிகாரிகள் இராஜினமாச் செய்துவிட்டது விசாரணையின் போது தெரியவந்திருக்கிறது. (ஒ-எ)

## ரூ. $2\frac{1}{2}$ லட்சம் நகை கொள்ளை! நிந்தவூரில் கைவரிசை!!

அம்பாறை, மே. 3

மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் புரியும் நிந்தவூரைச் சேர்ந்த நபர் ஒருவரின் வீட்டில் ஆயுதம் ஏந்திய இளைஞர் [illegible] கொள்ளை அடித்தது. இரவு வேளையில் [illegible] குள் புகுந்த இக்குழுவினர் வீட்டிலிருந்தவர்களைத் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் [illegible] கொள்ளை அடித்துச் சென்ற [illegible]


## 1ஆம் வருட நினைவஞ்சலி



திரு கந்தையா சுப்பிரமணியம்

[இளைப்பாறிய விதானையார், நீதிமன்ற விலைமதிப்பாளரும் விற்பனையாளரும்]

மலர்வு: 01 - 09 - 1915

முதிர்வு: 14 - 04 - 1988

1ஆம் வருட திதி: 03. 05. 1989

எம்மை வாழ வழிகாட்டிய தெய்வம்! எம்மை விட்டுப் பிரிந்து ஒரு வருடம் ஆகியும் அன்னரின் நினைவு எங்கள் மனதில் என்றும் நீங்காதென்றும் அன்னரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்ரேம்.

தகவல்:
அன்னரின் குடும்பத்தினர்

(1) களபூமி, காரைநகர்,
(2) 89, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (347)



## 31 ஆம் நாள் நினைவு



தோற்றம்: 19 - 12 - 1941

மறைவு: 05 - 04 - 1989

சவிரிமுத்து கிறிஸ்தோப்பர்
(சின்னப்பொடியன் தேவதாஸ்)

மதுரமான இயேசுவே! மண்ணுலகினின்று விண்ணுலகிற்கு உமது பாதார விந்தங்களில் அரவணைத்து நித்திய இளைப்பாற்றியையும், முடிவில்லா மோட்ச பேரின்ப பாக்கியத்தையும் அளித்தருளும் சுவாமி ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 05 - 05 - 89 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியில பங்குபற்றுமாறு பணிவபுடன் வேண்டுகின்ரேம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர்கள்,
பெருமக்கள், உறவினர்.

24/4, மத்திய கிழக்கு,
குருநகர், யாழ்ப்பாணம்

[வீட்டிற்கு வரவும்]

[348]



## ஓராண்டு நினைவு அஞ்சலி



அன்னை மடியில்
22- 01- 1960

அநியாய அழிப்பு:
14- 04- 1988

திதி: 03- 05- 1989

மாணிக்கம் தருமலிங்கம் (மோகன்)
(யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு ஊழியர்]

எமதருமைச் செல்வமே!
எம்மை விட்டு நீ பிரிந்து ஓராண்டு போனதடா?
எம்முயிர் எம்மை விட்டு போகும் வரை
எம் நெஞ்சிலிருந்து உன்நினைவு போகாது!
எம்முன்னே நீ என்றும் நடமாடும் தெய்வமடா!
எம் கண்ணில் வடியும் நீர் செந்நீர்த் துளிகளடா
என்று நீ மீளவந்து எம் துயரைத் தீர்ப்பாயோ?
அன்று வரை எமக்கு ஆறுத்துயரமடா!

தந்தை, தாய், மனைவி,
உடன் பிறந்தோர்,
மற்றும் உற்றர், உறவினர்.

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

(10795)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

**பொருள்:**

கள்ளை மறைந்திரு து குடித்து அறிவு மயங்குபவர், உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்தாளும் சிரிக்கப்படுவர்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
03 - 05 - 1989 த. பெ. இல: 23

# விவசாயிக்கு உதவிடுக!

வடக்கில் மீண்டும் விவசாயம் தலையெடுக்கும் நல்ல சகுனம் தெரிகிறது.

வெங்காயம், மிளகாய் உட்பட மற்றும் பல விளை பொருள்களின் விலைகள் உயர்ந்துவிட்டன. அதனுல் தோட்ட நிலங்களுக்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. தோட்ட நிலங்களுக்குரிய குத்தகை விகிதங்களும் அதிகரித்து விட்டன. தோட்ட நிலங்களைக் குத்தகைக்குப் பெறுவதில் போட்டி கூட ஏற்பட்டிருக்கிறது. கடந்த பல வருடங்களாகத் தரிசாகக் கைவிடப்பட்டிருந்த தோட்டக் காணிகள் பண்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் செய்தி குடாநாட்டின் விவசாய வளர்ச்சியிலும், பொருளாதார மேம்பாட்டிலும் அக்கறையுள்ள சகலருக்கும் மகிழ்ச்சி தரும் ஒன்ருகும்.

இப்பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகள் கடந்த சுமார் பத்து வருடங்களாக நலிந்து போயிருப்பது எல்லோரும் அறிந்த உண்மை. வெங்காயம், மிளகாய், புகையிலை போன்ற காசுப் பயிர்களைச் செய்கை பண்ணி விவசாயிகள் வீடுகள் சட்டியதும், வானொலி மற்றும் தொலைக்காட்சி முதலியனவற்றை வாங்கியதும் இலகுவில் நினைவில் இருந்து மறைந்துவிடக் கூடியவை அல்ல. அது போலவே, அந்த பொற் காலத்தைத் தொடர்ந்து அன்றுடக் கஞ்சிக்கே வருமானம் பெற முடியாமல் விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அளவுக்கு தமிழ்ப் பகுதி விவசாயம் வேர் சாய்க்கப்பட்டதையும் தமிழ் விவசாயிகள் மட்டுமல்ல தமிழர்கள் எவருமே மறந்துவிட முடியாது.

தமிழர்களின் விவசாயப் பொருளாதாரத்தை உடைக்க வேண்டும் என்ற வஞ்சனையுடன் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளும், இராணுவ நடவடிக்கைகளால், தமிழ் விவசாயிகளுக்கு உண்டான இடர்ப்பாடுகளும் இங்கு விவசாயத்தை வெறும் காட்சித் தொழிலாக்கியது. பல வருடங்களாக வயல் நிலங்கள் பண்படுத்தப்படாமல் தரிசாக விடப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களாலும் பல ஏக்கர் விவசாயப் பிரதேசங்கள் ''மந்து'' மண்டின.

அந்த நிலை நீங்கி, மீண்டும் குடாநாட்டில் விவசாயம் புத்துயிர் பெறுகிறது என்பது மனக் கனிவு தருவதாகும். விவசாயம் இப்பகுதியில் மீண்டும் பழைய நிலையை அடைவதற்கு, விவசாயிக்கு வேண்டிய உதவிகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுவது அவசியம்.

வங்கிகள் முன்னர் வழங்கி வந்த விவசாயக் கடன் திட்டங்கள் இப்போது இப்பகுயில் நிறுத்தப்பட்டுவிட்டன அவை மீண்டும் வழங்கப்பட வேண்டும். அதே போல ஒவ்வொரு பயிருக்கும் உரிய பருவ காலத்தில் மானிய அடிப்படையில் விவசாய உபகரணங்கள், இடுபொருள்கள் என்பன வழங்கப்பட வேண்டும்.

அவை மட்டுமன்று எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கை அன்னை சோராது மழை தரும் விதத்தில் எமது சுற்றுடல் சூழலைப் பாதுகாக்க வேண்டிய சமூகப் பொறுப்பின் பங்களிப்பும் இங்கு தேவைப்படுகின்றது. தண்ணீர் இல்லையேல் விவசாயம் ஏது? அதுவும் வானம் பார்த்த தமிழ்ப் பகுதிகளில் விவசாயம் பொலிய வேண்டுமெனில் இயற்கைச் சூழலை அழியவிடாது பாதுகாக்கும் பெரும் பொறுப்பு எல்லா மக்கள் கையிலும் உண்டு.

விவசாயம் பிழைத்தால் எல்லோருக்கும் உணவில்லை. உணவு வேண்டுமெனில் விவசாயிக்குத் தட்டுப்பாடில்லாமல் தண்ணீர் கிடைக்க எல்லோரும் உதவ வேண்டும். மக்கள் விவசாயிக்கு உதவினுல் தான் விவசாயியினுல் மக்களுக்கு உணவு தர முடியும். இதனைச் சமூகம் சரிவர உணராவிட்டால் அவே ஈற்றில் பாதிக்கப்படும். இறக்குமதி உணவு எத்தனை காலத்துக்குச் சாத்தியமாகும்? சந்ததி சந்ததியாக அதனை நம்பி வாழ முடியுமா?

# சோவியத் ஜனநாயக சீர் திருத்தம் வெற்றிபெறும் என்று புஷ் நம்பிக்கை

## பாதுகாப்பு அமைச்சருடன் கருத்து வேறுபாடு

வாஷிங்டன், மே 2

சோவியத் யூனியன், சீனு மற்றும் சோஷலிச நாடுகளில் இடம்பெற்று வரும் பொருளாதார சீர்திருத்தங்கள் வெற்றிபெறும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்2

அமெரிக்க வர்த்தக கழகக் கூட்டத்தில் பேசுகையில் அதிபர் புஷ் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

சோவியத் யூனியன் மற்றும் கம்யூனிஸ்ட் நாடுகளில் இடம்பெறும் சீர்திருத்தங்கள் தோல்வி அடையும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு சேனி கடந்த வாரம் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதற்கு நேர்மாருன கருத்தாக அதிபர் புஷ்ஷின் பேச்சு அமைந்திருந்தது.

திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவின் தாராள ஜனநாயகக் கொள்கையும்,

சீனுவின் பொருளாதாரக் கொள்கையும் வெற்றிபெறும் சாத்தியங்கள் தென்படுவதாகவும் அதிபர் புஷ் சொன்னுர். (எ)

## தென்கொரியாவில் மேதினத்தில் கலவரம்

சோல், மே. 2

மேதினத்தில் தென்கொரியத் தலைநகர் சோலில் நடந்த அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

யோன்சீ பல்கலைக் கழகத்தினுள் நுழைய முயன்ற மாணவர் பொலீஸார் மீது கற்களை வீசினர்.

இதைத் தொடர்ந்து 2ஆயிரத்துக்கு அதிகமான மாணவரைப் பொலீஸார் கைது செய்து தடுத்து வைத்தனர். [எ]

## உல்லாசக் கார் இறக்குமதியை சீன அரசு தடை செய்கிறது

பீகிங், மே. 2

உல்லாசக் கார்கள் இறக்குமதி செய்வதை தடை செய்யப் போவதாக சீன அரசு அறிவித்திருக்கிறது.

அரசுப் பேச்சாளர் யுவான்மூ இத்தகவலை வெளியிட்டார்.

மாணவர் தூதுக்குழுவுடன் அரசுப்பிரதிநிதிகள் பேச்சுக்களை நடத்தி வருவது தெரிந்ததே.

கோடைகால வெப்பத்தைத் தவிர்க்குமுகமாக அரசு செயலகங்களை கரையோரா நகரங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் இடமாற்றும் நடைமுறையும் கைவிடப்படும் என்றும் அரசுப்பேச்சாளர் அறிவித்தார். (எ)

## மேற்கு ஜேர்மன் - ஈரான் உறவு துண்டிக்கப்படும் நிலையில்?

தெஹ்ரான், மே 2

மேற்கு ஜேர்மனுடனை ராஜதந்திர உறவைத் துண்டித்துக் கொள்ளும்படி ஈரான் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஈரான் அரசுப் பத்திரிகை இந்த வேண்டுகோளை விடுத்தது.

இத்தகவலை ஈரானின் அரசு செய்தி ஸ்தாபனம் வெளியிட்டது.

அமெரிக்காவுக்காக மேற்கு ஜேர்மன் ராஜதந்திரிகள் உளவு வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அண்மையில் தெஹ்ரான் அரசுக்கு எதிராக அமெரிக்க உளவு அதிகாரிகள் நடத்திய சதிமுயற்சி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு மேற்கு ஜேர்மன் ராஜதந்திரிகளும் உடந்தையாக இருந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

## அமெரிக்கப் பாடசாலைக்கு காந்திஜி பெயர்

ஜெர்ஸி, மே 2

அமெரிக்காவில் ஜெர்ஸி நகரில் உள்ள அரசு பாடசாலை ஒன்றுக்கு மகாத்மா காந்தியின் பெயரைச்சூட்ட ஜெர்ஸி நகரசபை முடிவு செய்து உள்ளது.

20 ஆம் நூற்ருண்டின் அஹிம்சை மற்றும் சகோதரத்துவத்தின் சிற்பி மகாத்மா காந்தி என்பதை சிறப்பிக்கும் வகையில் அந்தப் பாடசாலை, மகாத்மா காந்தி பாடசாலை என்று அழைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## லண்டன் வீதியில் துப்பாக்கி நபர் நடத்திய வெறியாட்டம்

### ஒருவர் பலி 14 பேர் காயம்

லண்டன், மே 2

லண்டன் நகர வீதியில் 20 வயது இளைஞர் ஒருவர் தாறுமாருகச் சுட்டதில் ஒரு வழிப்போக்கர் கொல்லப்பட்டார். 14 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 3 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஞாயிறு நண்பகல் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. உயிரிழந்த கென்னத் மக்கின்ரொஷ் தேவாலயத்தில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தார்.

கறுப்பு காற்சட்டையும் கண்ணுடியும் அணிந்திருந்த அந்த இளைஞர் ஷொட்கன் ஒன்றைக் கையில் வைத்திருந்தார். காலில் வேட்டைக் கத்தி ஒன்றைச் செருகியிருந்தார்.

அந்த நபர் சுட்டதில் காரை ஓட்டிச் சென்ற ஒருவரின் முகத்திலும் கழுத்திலும் காயம் ஏற்பட்டது.

இச்சம்பவம் பற்றிப் பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி உள்துறை அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் உத்தரவிட்டிருக்கிறுர். (எ

## அழகாபுரம் கிராமத்தில்

## 'மனித இரத்த மழை பெய்தது பற்றி தமிழக அரசு விசாரணை

சென்னை, மே 2

தமிழகத்தில் உள்ள கிராமம் ஒன்றில் மனித இரத்தம் மழையாகப் பெய்ததா?

சேகரிக்கப்பட்ட மழைத் துளிகளை சோதனை செய்து பார்த்த போது மனித இரத்தத்தின் சாயல் அவற்றில் தெரிந்ததாக மாநில சுகாதார அமைச்சர் திரு. பொன்முடி தமிழ்நாடு சட்டசபையில் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 29 முதல் நான்கு தினங்களாக கன்யாகுமரி மாவட்டத்தில் அழகாபுரம் கிராமத்தில் 'மனிதரத்த மழை' பெய்ததாக வந்த செய்தி பற்றி கேட்டபோதே இப்பதில் அளிக்கப்பட்டது.

இது பற்றி மாநில அரசு விசாரித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. (எ)

## செர்ணேபில் எதிரொலி

மாஸ்கோ, மே 2

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் செர்ணேபில் அணு ஆலையில் ஏற்பட்ட அணுக்கசிவினுல் பாதிக்கப்பட்டவர்களில் இன்னமும் 6 லட்சம் பேர் வைத்திய மேற்பார்வையில் வைக்கப்பட்டிருப்பதாக பிராவ்தா நாளிதழ் தெரிவித்திருக்கிறது. (எ)

## அரபாத் பாரீஸ் விஜயம்

பாரீஸ், மே 2

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் நேற்று பாரீஸ் சென்ருர்.

ஜனுதிபதி மித்தரெண்டுடன் மத்திய கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவது சம்பந்தமான பேச்சுக்களை அரபாத் நடத்தவுள்ளார். (எ)

# கல்லூரி நிறுவி கல்வித் துறையில் சேவையாற்றிய கனகரத்தினம்

## கனகரத்தினம் ம.ம. வி. இன்று வைரவிழா காண்கிறது

நம் நாட்டு அரசியல் உலகில் சிறந்த தலைவராய் விளங்கிய முதுபெரும் அறிஞர் சனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் என்ற கலைக் கோயிலின் நிறுவுநர், அவரது வாழ்க்கை அரசியல் நெறியும், கல்வி நெறியும் சமய நெறியும், சமூக நெறியும் பொருளியல் நெறியும் ஒன்றித்த புதிய நெறியையும். புதிய வழியையும், விழிப்பையும், புத்துணர்ச்சியையும் இந்நாட்டில் விளைத்துள்ளது.

1928ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ஆம் நாள் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் நிறுவப்பட்டது. அக்காலத்தில்சட்டசபை உறுப்பினராகப் புகழோடு விளங்கிய அரியாலையூர் ஆறுமுகம் கனகரத்தினம் இக்கல்லூரியை நிறுவினுர்.

கல்லூரியின் வைரவிழா, நிறுவகர் நினைவு விழா, வருடாந்தப் பரிசளிப்பு விழா ஆகிய மூன்றும் ஒன்றிணைந்த விழா இன்று புதன்கிழமை கல்லூரியில் நடைபெறுகின்றது. 1987 அக்டோபரில் அகால மரணமடைந்த கல்வித்துறைப் பேரறிஞர் போராசிரியர் ப. சந்திரசேகரம் கல்லூரி நிறுவுநர் பற்றிக் கூறிய சில கருத்துக்கள் இடம்பெறுகின்றன.

கனகரத்தினம் வாழ்ந்த காலகட்டம் 1871 தொடக்கம் 1929 வரையும். அவர் நாட்டின் விடுதலை, ஒற்றுமை, தனித்துவம், தனிப்பெருமை, கல்வி, கலைவளர்ச்சி, தமிழ் வளர்ச்சி, சமயநெறி, சமுதாய சீர்திருத்தம் ... துறைகளிலும் முப்பது ஆண்டுகளாகப் பங்குபற்றி ... துறைகளுக்கும் தத்துவமளித்து கர்மயோகியாக விளங்கியவர். தாய்மொழி படிப்படியாக எல்லா நிலைகளிலும் போதனு மொழியாகுதல் வேண்டும் என்பதை வலியுறுத்தியவர்.

இருபதுவருடங்களாகஇலங்காபிமானி எனும் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றி, சிறந்த தேசிய வாதியாக விளங்கி, அரசியல் சமூக தத்துவத்தையும் உருவாக்கிய உத்தமர் இவர்.

நாட்டின் விடுதலை வேண்டி நின்ற இவர், நாட்டின் ஒருமைப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்திஞர். அதே வேளையில், தமிழ் மக்களின் தனித்துவம் பேணி வளர்க்கப்படவேண்டும் எனும் காரணத்தால் தமிழர் மாநாட்டுத் தலைவராகவும் விளங்கிஞர்.

1927 ஆம் ஆண்டு இலங்கைச் சட்ட நிருபணசபையில் பல்கலைக்கழக மசோதா விவாதிக்கப்பட்டது. நவம்பர் மாதம் நான்காம் திகதி அறிஞர் கனகரத்தினம் இவ்விவாதத்தில் பங்குபற்றி அளித்த கருத்துக்கள் இன்னும் நம்மைச் சிந்திக்க வைக்கக்கூடியன. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காலதாமதமின்றிப் பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறிய முதல் அரசியல் நெறியாளர் திரு. கனகரத்தினம் என்பதையும் கல்வி நெறியாளர் விபுலானந்த அடிகளார் என்பதையும் நாம் நினைவு கூருதல் வேண்டும்.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் செவிலித் தந்தை சேர் ஹேபேர்ட் ஸ்ரான்லி; தேசாதிபதி ஸ்ரான்லி கனகரத்தினம் நிறைந்த சிவநெறிப்பற்றும், தமிழ்ப் பற்றும், தேசியப் பற்றும் உடையவர் என்பதை அறிந்து அப்பெரியாரை மிக ... இருவர் ... தின் வேண்டுகோளுக்கிணங்கி சமதர்ம, சன்மார்க்க நெறியில் எழுந்த கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் என்ற இக் கலைக் கூடத்தை ஸ்ரான்லி ஆரம்பித்து வைத்தார்.

1928 ஆம் ஆண்டில் சமய நெறி கொண்ட, ஆனுல், சமயச் சார்பற்ற சமதர்மம் தழைக்தோங்க, யாழ்ப்பாண நன்னகரின் ஞான தீபமாய், சிவஞேபாய ஒளியாய் மறுமலர்ச்சிக் கல்லூரியாய் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் எழுந்து, சமூகக் கல்லூரியாகவும் வளர்ந்தது. வடமாகாணத்தில் எழுந்த முதல் அரசாங்கக் கல்லூரி இதுவேயாகும். இலங்கையிலே முதல்முதலாக எழுந்த இருமொழிக் கல்லூரியும் இதுவே ஆகும்.

1942 ஆம் ஆண்டில் புத்துயிர் பெற்று இப்பிரதேசத்தில் முதல் முதலாக எழுந்த மத்திய மகா வித்தியாலயமும் இதுவேயாகும். ஏழ்மை நிலை உடையோரும் கல்வி கற்கும் வசதிக்காகவே இப்பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. சாதி என்ற பாகுபாட்டினை அகற்றி, மாணவர் எல்லோரும் கல்வி பயில வழிவகுத்த கல்லூரிகளில் இக்கல்லூரி சிறப்பிடம் பெறுகின்றது.



ஆ. கனகரத்தினம்

## ஜோண் பொஸ்கோ பெற்ரேர் தின விழா

யாழ்ப்பாணம், மே. 3

யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய பெற்ரேர் தின விழா இன்று புதன்கிழமை பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் நடைபெறும்.

யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறுர்.

கௌரவ விருந்தினராகக் கலாநிதி அருள். திரு. எஸ். ஜே. இமானுவல் பங்குபற்றுகிறுர்.

யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையும் பங்குத் தந்தை அருள். திரு. ஆர். ஜோசவ்வும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர். [ச]

### சமய சந்நிதிகளில்

## ஈஸ்வராம்பா தின விழா

யாழ்ப்பாணம்' மே 3

அன்னை,, ஈஸ்வராம்பா தின விழா'' திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா சமித்தியில் நடைபெறவுள்ளது.

உலசம் முழுவதும் உள்ள சாயி அடியார்கள் அன்னை ஈஸ்வராம்பா நினைவுதினத்தை சிறுவர் தினமாகக் கொண்டாடி வருகிறுர்கள்.

இவ்விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

அதனைத் தெடர்ந்து பஜனை பாலவிஹாஸ் சிறுவர் சிறுமிரின் நடனம், பாட்டு, பேச்சு, நாடகம் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக பணிப்பாளர் ஆசிரியர் பயிர்ச்சிக் கல்லூரிகள் திரு. வே. சபாநாயகம் கலந்து கொள்ளுவார்.

இறுதியில் தலைவர் உரை தீபாராதனை ,மதிய போசனத்துடன் நிகழ்ச்சிகள் நிறைவு பெறும். [இ சி]

## 50 ஆண்டு பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், மே 3

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் முள்ளியவளை சிவஸ்ரீ நா. நடராஜக்குருக்களின் ஐம்பது ஆண்டுப் பூர்த்தி விழா வெகு சிறப்பாக நடந்தது.

சித்தாந்தக் கலாநிதி நா. கனகரத்தினம ''புராண கலாநிதி'' எனும் பட்டம் அளித்து குருக்களைக் கௌரவித்தார். (இ)




நபிமணி (ஸல்) அவர்களுக்கு சொல்லொணுத் துன்பம் விளைவித்த மக்காவாசிகள் ஈற்றில் சரணடைந்தனர். நபித் தோழர்கள் அனைவரும் சாரி, சாரியாக மக்காவில் நுழைந்து கொண்டிருந்தனர். அப்போது இஸ்லாத்தின் இணையற்ற வீரரும், இரண்டாம் கலீபாவுமான உமர் (ரலி) அவர்கள் மக்காவில் நுழையும்போது இன்றைய தினம் பழிக்குப்பழி வாங்கும் தினமாகும்' என்று சொல்லிக் கொண்டு நுழைந்தார்கள். ஆனுல் பெருமானுர் [ஸல்] அவர்கள் உமர் [ரலி] அவர்களை நோக்கி பின்வருமாறு கூறினுர்கள். உமர் [ரலி] அவர்களே! 'இல்லை' 'இன்றையதினம் மன்னிக்கும் தினமாகும்' என்று கூறினுர்கள். என்னே! நபி [ஸல்] அவர்களின் கருணையுள்ளம் சரித்திர ஏடுகளிலே கேட்டறியாத ஒரு வார்த்தை!

ஸஹர் முடிவு: 4 21
நோன்பு திறக்கும் நேரம்: 6. 20

# சோவியத் யூனியன்

## புதிய நாடாளு மன்றத்தை செயலற்றதாக்க முயற்சியாம்

மாஸ்கோ, மே 2

புதிதாகத் தெரிவு செய்ய சோவியத் நாடாளுமன்றத்தை அதிகாரமாற்றதாக்கும் முயற்சியில், தேர்தலில் தோல்வியடைந்த பழமைவாதிகள் குழு ஒன்று ஈடுபட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அண்மைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட பொருளாதார நிபுணர் காவ்ரில் பொய்போவ் இக் குற்றச்சாட்டை வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் உத்தரவாதம் செய்யப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறுர். (எ)

## பயமுறுத்தல்

லண்டன், மே 1

ஐரோப்பிய நாடுகளில் பணிபுரியும் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சாத்தானின் கவிதைகள் நூலை எழுதிய சால்மன் ருஷ்டி விவகாரம் தொடர்பாக இப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# உதயன்

03 - 05 - 1989 புதன்கிழமை


அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுகொள்ள நாடுங்கள்

## பூநாறி மரத்தடியில் திங்கள் இரவு மூவர் பலி

யாழ்ப்பாணம், மே 3

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கொக்குவில் பூநாறிமரத்தடிப் பகுதியில் மூவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள். அவர்களுடன் வந்த இருவர் காயமடைந்தனர்.

சம்பவம் நடந்த தலையாளி வைரவர் கோவிலுக்குச் சமீபமாக கத்திகள், வாள்கள் போன்ற பயங்கர ஆயுதங்களும் காணப்பட்டன.

பிரஸ்தாப நபர்களின் நடவடிக்கைகளில் அமைதிப்படையினர் சந்தேகமடைந்ததை அடுத்தே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஐந்துபேரும் கொக்குவில் வீதியால் வந்துகொண்டிருந்த சமயம் அமைதிப் படையினர் இவர்களை வழிமறித்தனராம். ஆனால் நிற்காமல் ஓடியதாலேயே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

ஆயுதங்களைப் பிரஸ்தாப நபர்களே எடுத்துவந்திருக்கலாம் என்றும், இவர்கள் கொள்ளையர்கள் கூட்டம் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனச் சந்தேகித்ததை அடுத்தே துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. [ஒ-9]

## வடமராட்சிப் பகுதியில் நேற்று ஹர்த்தால்

வடமராட்சிப் பகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

திங்கட்கிழமையன்று பருத்தித்துறைப் பகுதியில் மரணமான மூவருக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக வடமராட்சி முழுவதும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தச் ஹர்த்தால் அடுத்து நேற்று வடமராட்சிப் பகுதிக்கும் ஏனைய பகுதிகளுக்கும் இடையே தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

இந்தக் ஹர்த்தால் நாளை வரை தொடரும் என அறிவிக்கப்படுகிறது.

இந்த ஹர்த்தாலை முன்னிட்டு வடமராட்சியின் பல பகுதிகளிலும் வீதி எங்கும் மாவிலை, தென்னோலை தோரணங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. வாழை மரங்களும் கட்டப்பட்டிருந்தன.

### இன்று

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி ஆலய சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் இன்று புதன் காலை 7. 51 முதல் 8 51 மணிவரையில் வரும் சுபவேளையில் நடைபெறும்.

### ஈ. என். டி. எல். எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ் அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் கொலை செய்யப்பட்டமையை கண்டித்து ஈ. என். டி. எல். எவ். அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மக்களுக்குச் சேவை செய்யும் தலைவர்களின் இழப்பு மக்களுக்கே பேரிழப்பாகும் என்றும், கொலையைக் கடுமையாகக் கண்டிப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபரின் உறவினர்களுக்கும் மக்களுக்கும் அறிக்கைமூலம் அனுதாபமும் அஞ்சலியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரெலோ கண்டனம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ் அரசாங்க அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் கொலைசெய்யப்பட்டது கண்டிக்கத்தக்க செயலாகும்.

இனிமேலாவது இது போன்ற கொலைகள் தவிர்க்கப்படவேண்டும்.

இவ்வாறு ரெலோ இயக்கத்தின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் திரு. வி. ஜீ. செந்தோழன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். [ஒ]

### ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 3

ஆண்டு ஒன்றில் கல்வி கற்பிக்கும் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 6 ஆம், 8 ஆம், 9 ஆம் திகதிகளில் நடைபெறும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு இடம்பெறும்.

ஏற்கனவே நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்குபற்றாதவர்கள் மட்டும் இதில் கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

### 110 ஆவது நினைவு நாள்

நாளை 4ஆம் திகதி திரு. ஆனந்தக்குமார சுவாமியின் தந்தை சேர். முத்துக்குமார சுவாமியின் 110 ஆவது நினைவு நாள் ஆகும்

அவரது ஞாபகார்த்தப் பேச்சு இன்று புதன் கிழமை 3ஆம் திகதி இரவு 9. 30 மணிக்கு இலங்கை வானொலி தமிழ் ஒலிபரப்பில் இடம்பெறும். (சி)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திரு விஞசித்தப்பி நாகமுத்து

தோற்றம்: 30 4 1900 — மறைவு: 31-3-1989

எமது குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தி பெற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் யாவும் திருக்கேதீஸ்வர பாலாவித் தீர்த்தத்தில் 30-4-89 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

வீட்டுக் கிரியைகள் 4-5-89 வியாழக்கிழமை நயினாதீவு இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

6ஆம் வட்டாரம்
நயினாதீவு.

மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்
தகவல்: V. N. கிரி

10814

---

SHABRA TROPHY
Calling all Cricket Loving Clubs in the Northern Province
FOR THEIR

3rd ANNUAL LIMITED OVERS
Cricket Tournament
FOR
The SHABRA TROPHY
Organised by
JOLLY STARS SPORTS CLUB
Sponsored by
SHABRA UNICO FINANCE LTD.
Entries Close at 12-00 noon } ON WEDNESDAY 3rd MAY, 1989
Draw at 4-00 p. m. } AT JAFFNA HINDU COLLEGE
VENUE:- ST. PATRICKS College Grounds.
Collect your Entry Forms and Tournament Rules
From
K. Poopalasingam
Uthayan Advertisement Office
No. 15, Second Lane,
Power House Road, Jaffna.
N. Somasuntharam
45, College Road,
Jaffna.

## பருத்தித்துறை மோதலில் விடுதலைப் புலிகள் 3 பேர் மரணம்

பருத்தித்துறை, மே 3

நேற்று முன்தினம் பருத்தித்துறையில் நடந்த நேரடி மோதல் சம்பவம் ஒன்றில் தமிழீழவிடுதலைப் புலிகளின் பருத்தித்துறைப் பொறுப்பாளர் தியாகராஜா பரதராஜன் [மொறிஸ் வயது 20] மரணமானார். இவருடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களான தணிகாசலம் ஜெகதீசன் [ரம்போ 20 வயது], [வெள்ளை 12 வயது] வடிவேலு ஸ்ரீதரன் ஆகியோரும் மரணமானார்கள். இவர்கள் சயனைட் அருந்தி மரணமானதாகச் சொல்லப்பட்டது.

இவர்களது சடலத்தை அமைதிப் படையினர் எடுத்துச் சென்றனராயினும் பின்னர் சடலங்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

சம்பவத்தில் அமைதிப்படையினர் தரப்பிலும் ஒருவர் மரணமானதாகவும் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் சொல்லப்பட்டது ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. காயமடைந்த ஜவான் பின்னர் ஹெலியில் ஏற்றிச் செல்லப்பட்டார்.

அமைதிப் படையின் துப்பாக்கிச் சூட்டினால் மேலும் இருபொதுமக்கள் காயமடைந்தனர்.

எஸ். இராசலிங்கம் என்ற 17 வயது மாணவனும், எஸ். இராசலிங்கம் என்ற கடை உரிமையாளர் ஒருவரும் காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மேலும் பி. ஜெயசீலன் என்ற இளைஞர் புலோலி அமைதிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (அ-118-160-70-9)

### ஆனைக்கோட்டை ....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கராஜா தெய்வேந்திரம் என்ற அவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

### இந்திய படை . . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருந்தகனால் கடைகள் திறக்கப்படவில்லை. வாகன ஓட்டமோ, சன நடமாட்டமோ இருக்கவில்லை.

கொழும்பிலிருந்து வந்த இரவு வாகனங்களும் காலை 9 மணிவரை மூன்று முறிப்பு சோதனை முகாமின் ஊடாக அனுமதிக்கப்படவில்லை. எனினும் பின்னர் இந்த வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

ஊரடங்கு 9 மணிக்கு தளர்த்தப்பட்டதும் வவுனியா நகரம் வழமைக்குத் திரும்பியது.

#### சோதனைகள்

இச்சம்பவத்தை அடுத்துக் குருமண்காடு, வைரவப்புளியங்குளம், பண்டாரிகுளம், வேப்பங்குளம் போன்ற பகுதிகளில் பலத்த சோதனைகள் இடம்பெற்றன. பொதுமக்கள் அனைவரும் பொது இடங்களுக்கு அழைக்கப்பட்டு வீடு வீடாகச் சோதனை இடம்பெற்றது. யாரும் கைது செய்யப்பட்டது தொடர்பான விவரம் எதுவும் இச்செய்தி எழுதப்பட்டபோது உடனடியாகக் கிடைக்கவில்லை.

சம்பவம் தொடர்பாகச் செய்தி ஏஜன்சிகள் மூலம் கிடைத்த தகவல்கள் வருமாறு;-

இத்தாக்குதலின் போது இந்திய இராணுவத்தினர் மூவர் கொல்லப்பட்டனர்.

தடுப்புக்காவல் முகாமுக்கு அருகில் இருந்த இராணுவ முகாம் ஒன்றும் தாக்கப்பட்டது. இங்கும் இந்திய இராணுவத்தினர் மூவர் கொல்லப்பட்டனர்.

#### அரசு அறிக்கை

இது குறித்து இலங்கை அரசுச் செய்தியில் ''நான்கு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர். இரண்டு இந்தியப் பொலீஸ்காரர் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகள் 46 பேர் இந்திய இராணுவக் காவலில் இருந்து தப்பிச் சென்றனர்'' என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களைத் தேடி இந்திய இராணுவத்தினர் தீவிர வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு வன்னி மாவட்டத்தில் அடர்ந்த காடுகளில் விடுதலைப்புலிப் போராளிகள் தங்கியிருக்கும் இடங்களைத் தேடி இந்திய இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருப்பதாகவும் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி இருப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன என்பதாகும்.

### அடகு நகை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு 20 சதவீத வட்டியும் - அறவிடப்பட்டது.

அதற்குப் பிந்திய காலப்பகுதிக்கு வட்டி அறவிடுவதில்லை என்று முடிவாகி இருந்தது.

இதிலும் கடந்த 1989 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் நகைகளை மீளப் பெறும் பொருட்டு பணம் கட்டுவோருக்கு 20 சதவீத வட்டி 15 சதவீதமாகக் குறைக்கப்படும் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சலுகை ஜூன் மாதம் வரையும் இப்போது நீடிக்கப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அடகு நகையை மீளப்பெற பணம் செலுத்துவோர் 1984 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 1987 ஜனவரி 31 வரையான காலப்பகுதிக்கு 15 சதவீத வட்டியைச்செலுத்தினால் போதுமானது என அறிவிக்கப்படுகிறது. (அ-9)

---

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா தளையசிங்கம்

[உப அதிபர், புன்னாலைக்கட்டுவன் தெற்கு]

27 - 04 - 89 அன்று காலமான திருமதி நாகம்மா தளையசிங்கத்தின் இறுதிக்கிரியைகள் 03 - 05 - 89 இன்று புதன் காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
த. வேல்முருகதாஸ், த. குகதாஸ்
புதல்வர்கள்

புன்னாலைக்கட்டுவன். (10813)

---

## மரண அறிவித்தல்கள்

### திரு. வை, மு. பஞ்சலிங்கம்

[அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்]

திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்கள் 01-05-89 அன்று அகால மரணம் அடைந்தார். அன்னார் திருமதி கணேஸ்வரி (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் கீதாஞ்சலி (பொறியியல் விரிவுரையாளர், Purdue. University, America) கிருஸ்ணாஞ்சலி (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வை. முத்தையா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மா. கனகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி சத்தியலட்சுமி இளையதம்பி, திருமதி பத்மாவதி சினித்தம்பி, திரு. மகாரட்ணம், திருமதி மங்கையற்கரசி வாமதேவன், திரு. பரந்தாமன், திரு. லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம் திருமதி மகேஸ்வரி பரமசாமி, செல்வி யோகேஸ்வரி கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
திரு. வை மு. யோகேஸ்வரன்

அரச அதிபரின் வாசஸ்தலம்
[Residency]
ஆனைக்கோட்டை (10808)

### செல்வன் தி. பரதராஜன்

(மொறிஸ் M. O.)

திரு. திருமதி தியாகராசாவின் (யாழ். புகையிரத திணைக்களம்) புத்திரன் செல்வன் தி. பரதராஜன் (மொறிஸ்) 01-05-1989 இல் அகால மரணமானார்.

அன்னார் திருமதி செ. சந்திரவதனா (ஜேர்மனி), திரு. தி. பிறேமராஜா (ஆசிரியர், குமுழமுனை G. T. M. S.), திரு. தி பார்த்திபராஜா (சவுதி அரேபியா), திருமதி இ. சந்திரகுமாரி (கச்சேரி, யாழ்ப்பாணம்), திருமதி க. சந்திரபிரபா, திரு தி. பாலசபாபதி, செல்வி. தி. குமாரிபாமா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. எஸ். செல்வகுமார் (ஜேர்மனி), திரு. எஸ். இரவீந்திரகுமார் (அபுதாபி), திரு. வே. கணேசமூர்த்தி (பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்), திருமதி பி. மஞ்சுளாதேவி ஆகியோரின் மைத்துனரும், திரு. குமாரசாமி ஆறுமுகத்தின் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் 03-05-1989 இன்று புதன்கிழமை காலை 7-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை கடற்கரை இந்து மயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
திரு.ச. தியாகராசா

ஆத்தியடி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. [403]

### குமாரசாமி சண்முகலிங்கம் (தவம்)

கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த திரு. குமாரசாமி சண்முகலிங்கம் (தவம்) காலமானார்.

இவர் கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த காலம்சென்ற குமாரசாமியினதும் சிபாக்கியத்தினதும் அன்புப் புதல்வனும், யோகலிங்கம் (ஜேர்மனி), அச்சலிங்கம் (பிரான்ஸ்), செல்வநாதன் (இத்தாலி), சசிகலா, சுகந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கரம்பொன் இல்லத்தில் 03-05-1989 இன்று புதன் காலை 10-00 மணியளவில் நடைபெற்று கரம்பொன் கோட்டை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
சௌந்தரராஜன்

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை. [10815]

### திரு. விஸ்வநாதர் பொன்னம்பலம்

மல்லாகத்தைச் சேர்ந்த திரு. விஸ்வநாதர் பொன்னம்பலம் (ஓட்டோஸ் பொன்னம்பலம்) அவர்கள் காலமானார். இவர் பத்மினியின் அன்புக் கணவரும், பத்மதேவி, சண்முகதேவன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), பாமதேவன் (சவூதிஅரேபியா), பாஸ்கரதேவன் (லங்கா சீமென்ட் லிமிடெட், காங்கேசன்துறை) சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகநாதன் (விஸ்வமடு), குகானந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், வற்சலனின் பேரனாரும், தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தொண்டரும் ஊழியரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 02-05-1989 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.

தகவல்:
த. அகிலேஸ்வரன்.

(408)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 03 — 05 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org